இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம்

---

(1993, செத்தெம்பர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1993, செத்தெம்பர் மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30

அஞ்சல் செலவு ரூபா : 1·00

# 1993 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டம்.

[1993, செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 46/92

## 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கமநலச்சேவைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடனின் செலுத்தப்படாத முழுப் பகுதி மற்றும் அத்தகைய கடன்மீது செலுத்தப்படவேண்டிய வட்டி தொடர்பில், கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் தவணை தவறுகை செய்யப்படுமிடத்து அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றவிடத்து அத்தகைய கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணத்தொகை தொடர்பில் தவணை தவறுகை புரிந்துள்ளார் என நீதிவான் நீதிமன்றத்துக்கு அத்தகைய வங்கியானது அறிவிக்கலாம்.".

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.